# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

### கணிதம் - தரம் 04 / இரண்டாந் தவணை – வாரம் 7

தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி

**5.2 – கூட்டல்** , நான்கிலக்க எண்களை ஒன்றினிடத்திலிருந்து பத்தினிடத்துக்கு மட்டும் கொண்டு செல்லலுடன் கூட்டுவார்.

- மனக்கணிதம் - உ+ம் : 8 + 7 = எவ்வளவு? என வினவுங்கள். பிள்ளை மனதால் கூட்டி 8ற்குப் பிறகு 9, 10, 11, 12, 13, 14, 15 என எண்ணி விடை 15 எனக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
  12 + 4 =  16 + 5 =  12 + 8 =  24 + 6 =  17 + 2 =  14 + 7 =  13 + 6 =
- இரு நான்கிலக்க எண்களை கூட்டும் விதத்தைச் சொல்லிக் கொடுங்கள். உ+ம் :

```
     ①
  2 5 4 6
+ 1 2 3 5
---------
  3 7 8 1
=========
```

- ஒன்றின் நிரலிலுள்ள 6ஐயும், 5ஐயும் கூட்டினால் 11 பெறப்படும். எனவும் அதாவது பத்துகள் ஒன்றும் ஒன்றுகள் ஒன்றும் ஆகும். ஒன்றுகள் நிரலில் 1 எழுதி பத்துகள் நிரலில் 1ஐக் கூட்டி கூட்டுத்தொகை பெறப்படும் விதத்தை விளக்குக.

எண் சட்ட அட்டை

| ஆயிரம் | நூறு | பத்து① | ஒன்று | |
|---|---|---|---|---|
| 2 | 5 | 4 | 6 | |
| 1 | 2 | 3 | 5 | |
| 3 | 7 | 8 | 1 | 11 |

I. கூட்டுவோம்.

```
  4155      7438      4286      1421      5436      4265
+ 1527    + 1527    + 3141    + 1732    + 2586    + 2576
------    ------    ------    ------    ------    ------

======    ======    ======    ======    ======    ======

  3281      5284      6428      7542
+ 2849    + 1748    + 2384    + 1458
------    ------    ------    ------

======    ======    ======    ======
```

II. பழக்கடை ஒன்றில் கடந்த இரு மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள் பற்றிய தகவல் காட்டப்படுள்ளது. அட்டவணையின் உதவியுடன் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துக.

| பழவகை | மார்ச் மாதம் | ஏப்ரல் மாதம் |
|---|---|---|
| மாம்பழம் | 1532 | 1505 |
| அன்னாசி | 836 | 911 |
| தோடம்பழம் | 2462 | 2810 |
| பப்பாசிப்பழம் | 1450 | 1504 |
| விளாம்பழம் | 2265 | 3427 |

1). இரண்டு மாதங்களிலும் விற்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ......................

2). இரண்டு மாதங்களிலும் விற்கப்பட்ட தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது? ......................

3). மார்ச் மாதம் விற்கப்பட்ட தோடம்பழங்களினதும் விளாம்பழங்களினதும் கூட்டுத்தொகை எவ்வளவு? .............................

4). மார்ச் மாதம் விற்கப்பட்ட பப்பாசிப் பழங்களினதும் ஏப்ரல் மாதம் விற்கப்பட்ட தோடம்பழங்களினதும் கூட்டுத்தொகை யாது? ............................

5). மார்ச் மாதம் விற்கப்பட்ட எல்லாப் பழங்களினதும் கூட்டுத்தொகை எவ்வளவு? ...........

- பாடநூல் பக்கம் – 58, 59, 60 உள்ள உரிய பயிற்சிகளை செய்துகாட்ட வழிப்படுத்துங்கள்.